செ.வெ.எண்.271 நாள்:24.04.2018

# சூரிய மின சக்தி விளக்குகள் அமைத்திட அரசு மானியம் - தேவைப்படுவோர் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

------

மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மூலம் மரபு சாரா எரிசக்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக, "Grid connected Roof top Solar Power plant" திட்டம் நடைமுறையில் உள்ளது.

இத்திட்டத்தில், 1 KW முதல் 500 KW வரை சூரிய மின் மேற்கூரை (Solar Roof top Power plant) நிறுவுவதற்கு 30% மானியம் வழங்கப்படுகிறது. தனிநபர் குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், அறக்கட்டளைகள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவை மானிய விலையில் சூரிய மின் மேற்கூரை (Solar Roof top Power plant) அமைத்து பயன் பெறலாம்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் சூரிய மின் மேற்கூரை (Solar Roof top Power plant) அமைப்பதற்கு ஒப்பந்தம் புள்ளிகளின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1KW சூரிய மின் மேற்கூரை (Solar Roof top Power plant) அமைக்க ரூ.42,000/- மட்டும் செலுத்தி அமைத்து கொள்ளலாம். 1KW சூரிய மின் மேற்கூரை (Solar Roof top Power plant) அமைப்பதன் மூலம் ஒரு ஆண்டிற்கு ரூ.14,700/- வரை மின் கட்டணம் சேமித்து பயன்பெறலாம்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் பின்வரும் இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

www.tedaprojects.in/teda/schemes/applicationform.aspx

மேலும் விவரங்களை திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவி பொறியாளரை 7708064726 என்ற அலைபேசி வழியாக தொடர்பு கொண்டு பயன் பெற வேண்டும். என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.